Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 6

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க ஆனி 1967 ஜூன் | இதழ்

உள்ளுரை பக்கம்

ஏதும் குறைவிலார்	... 137
திரு ஓமாம்புலியூர்	... 144
நன்னெறி காத்த நாதனுர்	... 150
திருவெம்பாவை	... 157
சமாஜப் பணியாளர்கள்	... 164

பத்திராசிரியர் : மு. அருணசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

செயற்குழுக் கூட்ட அறிக்கை

30-7-67 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரி பார்த்தல், ஆண்டு விழா முதலிய பொருள்கள் பற்றி முடிவுகள் செய்யப் பெறும். செயற் குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். (செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் 11–6–67 ஞாயிறு மாலையில் புரசை சர். சித. முத்தையாச் செட்டியார் உயர்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள் 'சேக்கிழார்' என்னும் பொருள்பற்றி மயிலைக் கபாலீச்சுரத்தில் சிறப்புறச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஆடி மாத விசேட தினங்கள்

5	(21–7–67)	பட்டினத்தடிகள் விழா
15	(31–7-67)	மூர்த்திநாயனார் விழா
,,		புகழ்சோழ நாயனார் விழா
18	(3–8–67)	கூற்றுவ நாயனார் விழா
26	(11–8–67)	பெருமிழலைக்குறும்ப நாயனார் விழா
27	(12–8-67)	சுந்தரமூர்த்தி நாயனார் விழா
,,		சேரமான்பெருமாள் நாயனார் விழா
29	(14-8-67)	கலிய நாயனார் விழா
,,		கோட்புலி நாயனார் விழா

பிற செய்திகள்

நாகர்கோவில் நன்னெறி மன்றச் சார்பில் 25–5–67 அன்று திருஞானசம்பந்தர் குருபூசைவிழா திரு நாகமணிப் பிள்ளையவர்கள் இல்லத்தில் திரு. சி. வள்ளிநாயகம் பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. வித்துவான் சி. குமரேசப் பிள்ளை, முனிவெங்கடப்பா, சைவப் புலவர் பகவதிப்பெருமாள் பிள்ளை ஆகியோர் சொற் பெருக்காற்றினர்.

தெய்வச் சேக்கிழார் திருநாள் 11-6-67 ஞாயிறன்று புரசை வேம்படி விநாயகர் கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது. குமாரி R. கௌரி குழுவினர் தெய்வச் சேக்கிழார் பற்றி இன்னிசைச் சொற்பொழிவாற்றினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 40 | பிலவங்க ஆனி 1967 ஜூன் | இதழ் 6

ஏதும் குறைவிலார்

(ஆசிரியர்)

தொண்டர்களைக் கூறும்போது சேக்கிழார், அவர்கள் 'ஈர அன்பினர் ஏதும் குறைவிலார்' என்று பாடினார்.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலார்
ஈர அன்பினர் ஏதும் குறைவிலார்:
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

அடியார்கள் இறைவன் பணி ஒன்றையே தங்கள் கடமையாகக் கொண்டு வாழ்ந்தார்கள்; ஆதலாலே மனத்தில் கருணை நிரம்பியவர்களாய் வாழ்ந்தார்கள்; வாழ்க்கையில் எக்குறையும் இல்லாதிருந்தார்கள் என்று கூறினார்.

ஆனால் இக்காலத்தில் பெரிய துர்ப்பாக்கியம், வாழ்க்கையில் ஈசன் பணி என்ற நினைவு இல்லாது போய் விட்டது. ஆகவே, எல்லாம் குறைவாக இருக்கின்றதே அன்றி நிறைவு என்பது இல்லை. எத்தனைப் பூஜ்யங்களை நிரலே வைத்தாலும், அவற்றால் பெறுவது ஒன்றும் இல்லை. அவற்றின் முகப்பில் ஒன்று என்னும் எண்ணை

இட்டமாத்திரத்திலேயே, அவை யாவும் பொருளுடையன வாகி, பத்து, நூறு, ஆயிரம், இலட்சம், கோடி என்று பெருகிவிடுகின்றன என்பதை நாம் அறிவோம். பூஜ்யங்களின் வாழ்க்கையில் அந்த ஒன்று இருப்பது போல கடவுள் என்ற தத்துவம் மனிதன் வாழ்க்கையில் இருக்கிறது.

வாழ்க்கையிலுள்ள குழப்பம், அச்சம், திகைப்பு, ஏமாற்றம் என்பவற்றின் விளைவாக இன்று போலிச் சமாதானம் எழுந்துள்ளது. நம் முன்னோர் தெய்வ நம்பிக்கையோடு வாழ்ந்தார்கள் என்றால் 'அது அந்தக் காலம்; காலம் மாறிவிட்டது; இக்காலப் பிரச்சினைகள் வேறு. கடவுள் பெயரைச் சொல்லி இவற்றைச் சமாளிக்க முடியாது. நமது வலிமையால் நாமே சமாளிக்க வேண்டும்.' என்ற விடை எழுகிறது. இது ஒரு வகையில் அச்சத்தாலும் தோல்வி மனப்பான்மையாலும் எழுகின்ற விடையே அன்றி, தன்னம்பிக்கையால் வரும் விடையன்று.

ஊன்றி நோக்கினால் இன்றைய வாழ்க்கையில் உலக முழுமையும் இக வாழ்க்கைக்கு வேண்டுவன மட்டுமே பெருகியுள்ளன. புத்தியின் ஆற்றல் பெரிதும் ஓங்கியிருக்கிறது. உடல் திறன் ஓங்கியிருக்கிறது. ஆரோக்கியம் நிலவுவதற்கான சூழ்நிலை வளர்ந்து வருகிறது.

ஆனால் இவ்வலிமைகளால் நினைத்தபடி இன்பம் பெருகவில்லை. ஏன் என்பது ஆராயத்தக்கது. ஒரு முக்கியமான காரணம், நாம் அனைவரும் நாத்திகர் அல்லமாயினும், நம் வாழ்க்கையில் நம்மையும் கடந்த ஒரு பேராற்றலின் துணையை நாடும் நினைவு நமக்கு இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் தான் நமக்குக் குறைபாடு. நம் முன்னோர் உலகச் செல்வம் குறைவாகப் பெற்றிருந்தாராயினும், கடவுளிடம் பூண்டிருந்த மெய்யன்பு காரணமாக, இறை அருள் என்ற செல்வம் நிரம்பப் பெறவல்ல வழியில் சென்றனர். அதனால் ஏதும் குறைவில்லாதவராக வாழ்ந்தனர். நாம் பிறவெல்லாம் குறைவில்லாது பெறும்

வாய்ப்பிருந்தும், இவ்வருட்செல்வம் பெறும் நெறியில் செல்லாமையால், எல்லாம் குறைவு உடையவராகவே உழல்கிறோம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சைவ மக்கள் உணவு கொள்ளும் முன் ஒரு தேவாரம் ஓதிவிட்டே உண்பார்கள். தெய்வத்திற்குப் படைத்த உணவையே உண்ண வேண்டும் என்பது விதி; படைத்த உணவு பிரசாதமாகும். படைக்காத வெறும் உணவை சைவன் உண்ணலாகாது. உணவு உண்பது வயிறு வளர்ப்பதற்காக மட்டுமன்று. உடலோடு உயிர் இருந்து உலகில் இறைவன் நியமித்த வண்ணம் வினைப் பயன் துய்க்க வேண்டியுள்ளது; சில காரியம் செய்ய வேண்டியிருக்கிறது; ஆகவே உணவு தேவை; எனவே அவ்வுணவைச் சைவன் தெய்வப் பிரசாதமாகக் கருதி உண்டு தன் பணிகளைச் செய்து வருகிறான்.

'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற அப்பர் தேவாரம், 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்' என்ற பெரிய புராணப் பாடல் போன்ற திருமுறைப் பாடல்கள் சொல்லி உண்பது சைவர் வழக்கம். பெரியோரும் குழந்தைகளும் உடனிருந்து உண்பார்கள். கற்பிக்காமலே பல நல்ல பழக்கங்கள் சிறு பிள்ளைகளுக்கு இதன் மூலம் படிகின்றன. தெய்வ சிந்தனை, பெரியோரிடத்துப் பணிவு, பரபரப்பின்றி அடக்கத்தோடு காத்திருத்தல், அமைதி, சுத்தம், ஒழுங்கு, திருநீறு அணிதல், நல்ல தமிழ்ப் பயிற்சி முதலான அனேக நற்பண்புகள் இதன் மூலம் வளர்ந்தன. கல்வி மனநூல் வல்லார் இவ்வாறு ஏற்படும் நற்பண்புகளின் பயன் மிகப் பெரிது என்பர். இங்குப் பாடிவந்த பாடல்களும், இறைவனது கருணையையும் அடியவர்களுக்கு உணவு அருந்துவதின் பெருமையையும் நன்கு உணர்த்துவன இப்பாடல்களே இளம் பிள்ளையை இறைவனிடம் ஆற்றுப் படுத்தப் பெரிதும் உதவின. அதனோடு விருந்தோம்பல், உபகார சிந்தை, கருணை தன்னலத்தை மறத்தல் முதலிய பண்புகளையும் இளம் பருவத்திலிருந்தே உணர்த்தி வந்தன.

காலக் கோளாற்றினால் இவ்வகைப் பழக்கங்கள் சைவருடைய தினசரி வாழ்க்கையில் மறைந்து போயின. காந்தியடிகள் இதை நன்குணர்ந்திருந்தார். இந்திய ஜன சமூகத்துக்கு நாட்டுப்பற்றும் இறையுணர்வும் ஊட்ட அவர் முற்பட்ட போது, சமூகமாக வாழ்கின்ற மக்களுக்கு இது மிகவும் அவசியமானதொரு பண்பு அல்லது சடங்கு என்பதை நன்கு உணர்ந்தார். பல்வேறு நிலையிலுள்ள மக்களை ஒற்றுமைப்படுத்தக் கூட்டுப் பிரார்த்தனை மட்டுமன்றி கூட்டாக ஒருங்கிருந்து உண்பதும் முக்கியமென்று அவர் கருதினார். அதன்மேல், தாம் அமைத்த நிர்மாணத்திட்ட நிறுவனங்கள் அனைத்திலும், ஊழியர், மாணாக்கர், ஆசிரியர் முதலிய அனைவரும் மூன்று வேளையும் ஒன்றாய் இருந்து உண்ண வேண்டும் என்றும், உண்ணும்போது கூட்டாக ஒரு மந்திரம் சொல்லிப் பின் உண்ண வேண்டும் என்றும் விதித்தார். 'ஓம் ஸஹநாவவது ஸஹநௌ புனக்து' என்ற உபநிடத மந்திரம் அவர் விதித்தபடி இன்றும் சொல்லப்பட்டு வருகிறது. இறைவன், ஆசிரியர், மாணாக்கரிடையே பல துறையிலும் ஒற்றுமையைத் தந்து அவர்களைப் பேணி வளர்ப்பானாக என்ற கருத்தைக் கொண்டது இம்மந்திரம்.

இவ்வாறு உணவில் மட்டுமில்லாமல் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தெய்வ நினைவுக்கான செயல்களை வழக்கத்துக்குக் கொண்டு வருவது, எல்லாவற்றிலும் பிரிவினையே பேசுகின்ற இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமாகிறது. சிறப்பாக நகர வாழ்க்கையுடையோரிடையே இது இன்னும் அவசியமாகிறது. ஏனெனில் அங்கு எங்கு நோக்கினும், எந்த நேரமும் பரபரப்பு. காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கையில் படுக்கும் வரையில் எல்லாம் வேகந்தான். பிள்ளைகள் தந்தையைப் பார்த்துப் பேசக் கூடச் சந்தர்ப்பம் குறைவு என்று சொன்னாலும் உண்மையாகும். அவர்கள் வேலையைத் தேடி, நேரத்தை முன் வைத்துபஸ்ஸுக்கும், ரயிலுக்கும் கடைக்கும், கச்சேரிக்கும் என்று ஓடுகிறார்கள். நகர மக்கள் வாழ்க்கை வேதனையை மறந்து உல்லாசமாகச் சற்று

நேரம் பொழுது போக்கலாம் என்று எண்ணிச் சினிமாவுக்குச் செல்கிறார்கள்; அங்கும் கூட எவ்வளவு பரபரப்பு வேதனை, சண்டை, அடிதடி! பரிதாபகரமான இந்தச் சூழ்நிலைகளில் கடவுள் நினைவு எழ எங்கு இடம் இருக்கிறது. ஆதலினால் கடவுளை நினைப்பதற்கும் தொழுவதற்கும் என்று தனியே ஒரு நேரம் ஒதுக்கி வைப்பது மிக்க அவசியமாகும்.

மலாயாவில் வாழ்ந்த சைவப் பெரியார் கா. இராமநாதம் செட்டியார் தம் வாழ்க்கையில் சில நல்ல பண்புகளைக் கடைப்பிடித்திருந்தார். தாம் எங்கிருந்தாலும் அதிகாலையில் 5 மணிக்கு எழுந்து கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு தங்கியிருந்த வீட்டில் உள்ளோர் அனைவரையும் கூட்டிச் சிறியதொரு பிரார்த்தனை நடத்துவது அவருடைய வழக்கம். இதில் ஆண் பெண் சிறு பிள்ளைகள் அனைவரும் கலந்து கொண்டாக வேண்டும். எல்லோரும் ஒவ்வொரு பிரார்த்தனைப் பாடல் பாட வேண்டுமென்பது அவரது நியதி. இவ்வாறு காலையில் எழும்போதே கடவுள் நினைவோடு எழுவது, அனைவருக்கும் வாழ்க்கையிலே பெரியதோர் எழுச்சி தந்ததென்பது அவருடன் பழகினோர் அனைவரும் அனுபவித்து அறிந்த உண்மை.

இவ்வகைக் குடும்பக் கூட்டுப் பிரார்த்தனை, சிறப்பாகக் குழந்தைகளை எதிர் காலத்தில் தெய்வ நம்பிக்கையோடு இயக்கப் பேருதவி செய்கிறது என்பது உறுதி.

இதைப் பலர் கருத்தளவிலும் ஸ்தான ரீதியாகவும் ஒப்புக்கொள்கிறார்கள். சிலர் கூட்டுப் பிரார்த்தனையில் உதாரணமாக உணவு கொள்ளுமுன் சொல்லும் போது, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுளெல்லாம் தலை' என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இக்குறட்பாடல் வாழ்க்கை நெறியைப் போதிக்கிறதென்பது உண்மை. ஆனால் இது போதாது தெய்வ நம்பிக்கையைப் போதிக்கும்

பாடலே வேண்டும். ஆகவே தெய்வ உணர்வு வேண்டிய போதெல்லாம் நம் அருட்பாசுரங்களாகிய திருமுறைகளை ஓதுதல் வேண்டும் என்பதும் முக்கியம்.

'அடியார் தமை அமுது செய்வித்தல்' என்பது பெருஞ் சிறப்புடைய ஒரு கருத்து 'அதிதிசத்காரம்' என்று வடமொழியில் இதை வழங்குவர். வடமொழி இதிகாசங்களிலும், தமிழில் நாயன்மார் வரலாறுகளிலும், விருந்தோம்பினோர் சிறப்பைப் பெரிதாகக் காணலாம். உணவுப் பஞ்சமே எப்போதும் நிலவி வருகின்ற இன்றைய இந்திய நாட்டில், விருந்தோம்பலுக்கு மிகவும் சிறப்பான பொருளுண்டு.

இந்த நாட்டின் ஆட்சி சமயச் சார்பற்ற ஆட்சி என்று சொல்கிறார்கள். தெரியாதவர்கள், தங்களுக்குச் சமயச் சார்பு வேண்டாமென்று எண்ணி விடுகிறார்கள். "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" ஆட்சி முறை எப்படி மக்களும் அப்படி. தெய்வமே வேண்டாம் மனிதன் பிழைத்தால் போதும் என்ற உணர்வும் செயலும் மலிந்து வருகின்றன. இது நல்லதன்று. மனிதன் வாழ வேண்டும், மிருகம் மாதிரி வாழ்ந்தால் போதாது, தெய்வ நெறியில் வாழ வேண்டும். உலகெங்கும் இதற்கான எழுச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த எழுச்சியின் பிரதி பலிப்பை இல்லங்கள் தோறும் காண வேண்டும். குடும்ப வாழ்க்கையில் மீண்டும் இறைவனருள் புகுமானால் இது விரிந்து விரிந்து அணுயுகம் என்று சொல்லுகின்ற இந்த யுகத்தின் பிரச்சினைகளையும் சமாளிக்க வல்ல பேராற்றலை ஒவ்வொருவருக்கும் தரும்.

பொருளாதார முன்னேற்றமும், அரசியல் முன்னேற்றமும் தற்போதைக்கான பரிகாரங்கள் தருகின்றன. ஆனால் இந்த நிலை போதுமா? "கடவுளே, உன் சித்தம் நடப்பதாக என்று கிறித்தவ வேதம் கூறும். வேண்டத் தக்கது அறிவோய் நீ ……… வேண்டும் பரிசு ஒன்று

உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்று சைவ வேதம் கூறுகிறது. இந்த நினைவோடு வாழ்ந்த பெரியார் நினைவை நாம் கொண்டாடுகிறோம். நாயன்மார் தினங்களெல்லாம் இக்கருத்துடையனவே. சமீப காலத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரும் காந்தியடிகளும் இந்த நினைவையே செயலாக்கி யிருக்கிறார்கள். இவ்வாறு செயலாற்றிய காரணத்தால் அவர்கள் வாழ்க்கை நிறைவு பெற்றிருந்தது; அவர்கள் "ஏதும் குறைவிலார்" என்று நாம் நன்றாய்ச் சொல்ல முடியும். நாமும் இதே பாதையில் செல்லக் கடமைப்பட்டவர்கள். எண்ணற்ற சைவ மக்கள் இப்படி நமக்குக் காட்டியிருக்கிறார்கள். பெருந் தொகுதியினரான மக்கள், வாழ்க்கைத் துறைகள் யாவும் முரண்பாடாக மாறிவிட்ட இக்காலத்திலும், இவ்வாறு வாழ்வார்களானால் வாழ்க்கைப் பிரசிச்னைகள் தாமே தீர்ந்துபோகும். திகைப்புக்கெல்லாம் தேறுதல் உயிருக்கு யிராய் இருந்து நடத்துகின்ற அப்பெருமானால் உணர்த்தப் பெற்று, தனி வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும், நாட்டு வாழ்க்கையும், உலக வாழ்க்கையுமே மேம்பட்டு இன்ப முடையதாக ஆகும். சிக்கல்கள் எழுவதற்கான அடிப் படை எடுபட்டுப்போகும். இன்றைய வாழ்விலுள்ள பெரும் குறைபாடாகிய தெய்வ சிந்தனை யின்மை அகலவே, ஒழுங்கீனம், அதிருப்தி, பூசல், சுய நலம் முதலான அதன் விளைவுகள் தாமே அகன்று, மக்கள் 'ஏதும் குறைவிலார்' ஆவதற்கு முதல் படியில் அடி யெடுத்து வைத்தவர்கள் ஆவார்கள்.

திரு ஓமாம்புலியூர்

(மு. அ.)

இடம் :- சிதம்பரத்திலிருந்து தென் மேற்கே 18 மைல்; காட்டு மன்னார்கோவில் வழியே இவ்வூருக்குப் பஸ் செல்கிறது. கொள்ளிடத்தின் வடகரையிலேயேகோயில். இது காவிரி வடகரைத் தலங்களுள் 32ஆவது ஆகும்.

பெயர் :- அம்பிகைக்குப் பிரணவப் பொருள் (முத்தி பஞ்சாட்சரம்) உபதேசித்த காரணத்தால் திரு-ஓம்-ஆம் புலியூர் என்ற பெயர் ஏற்பட்டது. வியாக்கிரபாதர் (புலி) பூசித்தமையால் புலியூர் என்றாயிற்று. பஞ்சப்புலியூர்களுள் இதுவும் ஒன்று. இவை பெரும் பற்றுப் புலியூர் (சிதம்பரம்), பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் பூசித்தது; எருக்கத்தம் புலியூர் – சூரியன் பூசித்தது; ஓமாம் புலியூர் – அம்பிகை பூசித்தது; பாதிரிப் புலியூர்;-முருகன் பூசித்தது; பெரும்புலியூர் (தென் புலியூர்), வியாக்கிர பாதர் பூசித்தது. இவ்வைந்தோடு கானாட்டம் புலியூர்-பதஞ்சலி பூசித்தது என்று சேர்த்துச் சொல்வதுமுண்டு.

சுவாமி பெயர் :- துயர் தீர்த்த நாதர்; யுகந்தோறும் பிரணவ புரீசர், வியாக்கிர புரீசர் என்ற பெயர்கள் அமைந்தன. அம்பிகை பூங்கொடி நாயகி. சம்பந்தர் பதிகம் 'பூங்கொடி மடவாள் உமையொரு பாகம்' என்றே தொடங்குகிறது. தலவிருட்சம் இலந்தை.

இத்தலத்தில் அந்தணர் சிறப்பாக வாழ்ந்த செய்தியைச் சம்பந்தர் எல்லாப் பாடல்களிலும் பாடுகிறார். "ஓமாம்புலியூர்" என்று அவர் தலப் பெயரை அமைத்துக்கொண்டு பாடுவது இக்கருத்தேபற்றி போலும். (ஓமம் ஆம் புலியூர்.; ஓமம்-ஹோமம்.)

கோயில் :— பழைய கற்கோயில்; கோயிலுக்கு எதிரே திருக்குளம்; சிறு கோபுரம்; கோபுர வாயிலில் சிறு கோயி லில் விநாயகர்; உட்புறம் இடப்பக்கம் மடைப்பள்ளி; கிணறு; வலப்புறம் வசந்த மண்டபம் மதில்கள் செம்மை யாக உள்ளன. விசாலமான தளவரிசை போடப்பட்ட பிர காரம்; திருமாளிகைச் சுற்றில் நிருதி விநாயகர்; தேவியர் களோடு கூடிய ஆறுமுகர் கோயில் கஜலட்சுமி கோயில் கள் உள்ளன. மதில் மீது நந்திகள் வட பிரகாரத்தில் தலவிருட்சமான இலந்தையின் அடியில் அம்பாள் தவம் செய்த கோலம்; பெரிய மகாமண்டபம்.

மூர்த்தி :— சுவாமி மெலிந்து நீண்டபாணம். வாயி லில் துவார பாலகரும் விநாயகரும்; அடுத்து வடபால் தக்ஷிணாமூர்த்திக்குப் பெரிய கோயில்; அடுத்து அம்பாள் கோவில்; அம்பாள் அழகான பெரிய வடிவம். தக்ஷிணா மூர்த்திக்கும் அம்பாளுக்கும் எதிரே மகா மண்டபத்தில் தென்புறம் இரு வாயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. தென்புறக் கோட்டத்தில் அம்பாள் சந்நிதி எதிர் வாயி லில் ஒரு புறம் அதிகார நந்தியும் மறுபுறம் ஒரு முனிவர் சிலையும் உள்ளன. தக்ஷிணாமூர்த்திக்கு நேரிலுள்ள வாயி லில் தென்புறம் கல்லாலான நடராஜா வடிவம் அமைத்து இரண்டு கல்தூண் நிறுத்தி மண்டபமாகச் செய்யப் பெற் றுள்ளது. இது அபூர்வம்; அடுத்து நர்த்தன கணபதி; தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர்; சுவாமி கோயில் விமா னத்தில் தக்ஷிணாமூர்த்திக்கு நேர் மேலே வீணா தக்ஷிணா மூர்த்தி (கிலம்) மேதா தக்ஷிணாமூர்த்தி, யோக தக்ஷிணா மூர்த்தி உருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. நிருதி கோயிலில் விநாயகர் சிலை மூன்று. அடுத்து சிறிய பரா சக்தி கோயில்; லட்சுமி கோயிலில் கஜங்கள் தனியே துதிக்கைகளைத் தூக்கி நிற்கின்றன. சண்டேசர், சூரியன் பைரவர், ஐயனார், பின்னமாகச் சூரியன் பைரவர் உருவங் கள் தனியே உள்ளன. இவை வடிவில் பெரியன. அம் பாள் கோயில் கோட்டங்களில் விநாயகர், மனோன்மணி, இச்சாசக்தி கிரியா சக்தி; ஞானசக்தி மட்டும் இருந்த கோலம்.

உற்சவ மூர்த்திகள் :— எல்லா மூர்த்திகளும் உள்ளனர். தக்ஷிணுமூர்த்தி, உற்சவமூர்த்தி தனிச்சிறப்பு உடையன. நடராஜாவும் அம்பிகையும் சிறிய வடிவங்கள் வியாக்கிரபாதரும் உண்டு.

பாடல் :— சம்பந்தர் புறநீர்மைப் பண்ணில் ஒரு பதிகமும், அப்பர் தாண்டகம் ஒன்றும் உள்ளன. இருவரும் ஓமாம்புலியூர் வடதளி என்றும், இங்கு 'ஒன்றிய சீர் இருபிறப்பர் முத்தி ஓம்பும் உயர் புகழ் நான் மறையாளர் வாழ்கின்றனர்' என்றும் பாராட்டுகின்றனர். அங்கி அருச்சித்து வழிபட்டான் என்றும், துயர் தீர்த்த நாதர் என்பவரை 'வரும் துயரம் தவிர்ப்பான்' என்றும் அப்பர் கூறுகிறுர்.

—அடுக்கும் ஓம்

ஆம்புலியூர்ப் பூங்கொடியோ டன்புடனே யாவருக்கும்

தேம்புதுய ரந்தீர்த்த செல்வமே.

வரலாறு :— இத்தலத்து உள்வாயிலின் இருபுறமும் நீளமான சிறு கற்களில் சிறு புடைப்புச் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றுள் தென்புறமுள்ளது சம்பராசுரனைக் குறிப்பது. சம்பராசுரன் தவம் செய்து தன்னை இரண்டாகப் பிளந்தாலன்றி யாரும் கொல்ல முடியாது என்று பெரு வரம் பெற்றிருக்கிறுன். அவன் செய்யும் கொடுமை பொறுக்கமாட்டாது மும்மூர்த்திகளும் சிவபரம் பொருளை நோக்கித் தவம் செய்கிறுர்கள். அவர்களுள் திருமால் மட்டும் ஒருவரும் அறியாது தனியே இங்கு வந்து பூசை செய்கிறுர். அவருடைய பூசைக்கு மகிழ்ந்த சிவபெருமான் சம்பரவதத்துக்கான சக்கரத்தை அவருக்கு அருளுகிறுர். (திருவீழி மிழலையில் தம்முடைய கண் மலரால் அருச்சித்துப் பெற்ற சக்கரம் வேறு) இச்சக்கரத்தால் சம்பரன் உடலை இரண்டாகப் பிளந்து திருமால் உலகைக் காப்பாற்றுகிறுர். சம்பந்தர் இரண்டாம் பாடலில் சம்பரனைக் குறிப்பிடுவது அறியத்தக்கது.

வடபுறம் பஞ்சபுலியூர் என்ற ஐதிகம் தீட்டப்பட்டுள்ளது. முதலில் அம்பிகை பூசித்த ஓமாம்புலியூர், பதஞ்சலி பூசித்த கானாட்டம் புலியூர், புலி பூஜித்த திலலையாகிய திருப்புலீச்சுரம், சூரியன் பூஜித்த எருக்கத்தம்புலியூர், முருகன் பூஜித்த பாதிரிப் புலியூர் ஆகிய ஐந்தும் இங்கே ஐதிகச் சிற்பமாக உள்ளன.

அம்பிகை இங்கு இலந்தையடியில் பூஜித்து பஞ்சாக்கர உபதேசம் பெற்றார். இதனால் இது பிரணவபுரி; தல விருட்சம் இலந்தை ஆயிற்று.

வியாக்கிரபாத முனிவர் இங்கு பூஜித்து அருள் பெற்ற காரணத்தால் இவ்வூர் புலியூர் என்றும், சுவாமி வியாக்கிர புரீசுவரர் என்றும் பெயர் பெற்றார். ஆதியில் இங்கு ஒரு வில்வ மரம் இருந்தது. ஒரு சமயம் புலிக்கு அஞ்சி ஓடி வந்த வேடன் இந்த வில்வ மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான். தூக்கம் வந்தபோது தூங்காமல் இருப்பதற்காக வில்வ இலையைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். கீழே இருந்த சிவலிங்கத்தின் மீது வில்வ இலை விழுந்தது. அன்று சிவராத்திரி; விழுந்த இலையையே புலியும் பார்த்துக் கொண்டிருந்தது. வேடனும் புலியும் அன்று பட்டினி. வில்வார்ச்சனை, சிவதரிசனம், உபவாசம், கண் விழிப்பு ஆகிய இப்புண்ணிய விசேடத்தால் இருவரும் முத்தியடைந்தனர் என்பது வரலாறு.

நிர்வாகம் :- கோவிலுக்குச் சொத்து 180 ஏக்கராவுக்கு மேல் உண்டு. வருவாய் தரக்கூடிய பிற தோப்பு வசதுகளும் உண்டு. கடலங்குடி ஜமீன்தார் என்ற ஒரு ஒரு நிர்வாகம்; மிகவும் திருப்தியற்ற நிலை; கோபுரம் இடிந்து வருகிறது, இரண்டாம் நிலை விழப் போகிறது. உடனே சிறு திருப்பணிகள் செய்தால் கோயிலைக் காப்பாற்ற முடியும். அரசாங்கத்தார் இதற்குப் பெருந் தொகை திருப்பணிக்காகக் கொடுத்தும் கூட நிர்வாகத்தா

ருடைய சிரத்தையின்மையால் ஒன்றும் நடைபெறவில்லை யென்று ஊரார் மிக வருந்திச் சொல்லுகிறார்கள். மேளம் வரையில் சகல சிப்பந்திகளும் இருக்கிறார்கள்.

கல்வெட்டு : குலோத்துங்கன் III—, கோப்பெருஞ் சிங்கன் கல்வெட்டுகள்–5 ஆக ஆறு உள்ளன. சுவாமி பெயர் வடதளியுடையார், வருந்துயரம் தீர்த்த நாயனார் என்பது. ஊர் பிற்காலக் கல்வெட்டுக்களில் வடகரை விருதராஜ பயங்கர வள நாட்டு மேற்கா நாட்டுப் பிரமதேயம் ஓமாம்புலியூர் ஆகிய உலகளந்த சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு : இத்தலத்தில் அம்பிகைக்குப் பெருமான் குருமூர்த்தியாயிருந்து பிரணவம் உபதேசித்தார் என்பது வரலாறு. கோயிலில், சுவாமி கோயிலுக்கும் அம்பிகை கோயிலுக்கும் இடையில் வழக்கமாய் நடராசர் எழுந்தருளுகிற சபை இருக்குமிடத்தில் தக்ஷிணாமூர்த்தியின் கோயில் இருக்கிறது. இதற்கெதிரே சந்நிதியமைத்தவாறு, தென்புறச் சுவரில் தனிவாயிலும் உண்டு. மூர்த்தி பெரிய திரு உரு. (அருகே சனகாதி முனிவர் நால்வரும் உள்ளனர்.) திருமுகம் மிக்க பொலிவுடையது. இவர் பிரணவம் உபதேசித்த குருமூர்த்தி எனப்படுகிறார். இவ்வாறு தனியே தக்ஷிணாமூர்த்திக்குகந்த தனிக்கோயில், வேறெந்த ஆலயத்திலும் இல்லை. இது இத்தலத்துக்குரிய தனிச் சிறப்பு. இங்கு தக்ஷிணாமூர்த்தி உற்சவமூர்த்தி சிறப்பாகத் தனியே எழுந்தருளுவிக்கப் பெற்றிருக்கிறார். வழக்கம்போல் தென் கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி வேறாக இருக்கிறார். இந்தத் தக்ஷிணாமூர்த்தி குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து உபதேசித்த காலத்தில், இவர் ஒரு மூர்த்தியை சம்பிரதாயமாக வழிபட்டார் என்றும், அம்மூர்த்தியே எதிரில் வடதளி என்ற கோயிலில் உள்ள வடதளீசுவரர் என்றும், இதுவே, சம்பந்தர் தேவாரத்துள் “ ஓமாம்புலியூர் உடையவர் வடதளியதுவே” என்று பாடியதன் கருத்து என்றும் சொல்லுகிறார்கள்.

வடதளி ; "ஓமாம்புலியூர் உடையவர் வடதளிய துவே" என்று சம்பந்தர் பாடல்தோறும் போற்று கிறார். இது பெரிய கோயிலின் எதிரிலுள்ள தீர்த்தத் தின் கீழ்க்கரையில் அமைந்துள்ள பழமையான சிறு கோயில். சுவாமி வடதளீசுவரர். மூலவர் பெரியதிரு வுரு; சுயம்பு; தூரத்திலிருந்து பார்த்தால், கோயிலே முழுமையும் பசுமையாகத் தோற்றும். காரணம், அதன் மேல் வளர்ந்து தழைத்துள்ள ஆல் அரசு வேம்பு நுணு அத்தி முதலான பெருமரங்கள். சுற்றுக் கோயில்கள் இருந்தன; போய்விட்டன. மதில் சுவர் இருந்தது, இடிந்துவிட்டது. சுவாமி வாயிலில் வலப்புறம் விநாயக ரும் இடப்புறம் அம்பிகை, சண்டேசரும் உள்ளனர். சந் நிதி, ஜம்புகேஸ்வரம் போல எப்போதும் நீர் கோத்துக் கொண்டிருக்கிறது; நீர்-வௌவால் எச்சம்! ஒரு காலப் பூசை மட்டும் நடைபெறுகிறது. கூடிய விரைவில் வட தளிக் கோயில் முன்னமே இருந்தது இப்போது இல்லை என்ற நிலைக்கு வரப்போகிறது, அறநிலைய இலாகா நிர் வாகத்துக்குட்பட்டது!

ஆனி மாத விசேட தினங்கள்

16 (30–6–67) ஏயர்கோன் கலிக்காம நாயனார் விழா.
27 (11–7–67) மாணிக்கவாசக சுவாமிகள் விழா.
28 (12–7–67) அமர்நீதி நாயனார் விழா.
29 (13–7–67) ஆனித்திருமஞ்சன விழா.

நன்னெறி காத்த நாதனார்

சைவப்புலவர் சி. குமரேசப்பிள்ளை

முன்னெறி யாகிய முதல்வன் முக்கண்ணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே

என்பது அப்பர் பெருமான் திருவாக்கு. முன்னெறியாகிய வேத நெறியில் முழு முதற் பொருளாகக் கூறப்பட்டவன் முக்கண்ணனாகிய சிவபெருமான். அப்பெருமான் உலகோர் உய்வதற்கென்று நந்தியம்பெருமான் மூலமாக மலைவு அகற்றி யெடுத்துக் காட்டிய நெறி சைவ நெறி. அந்நெறியே சரணடைந்து உய்வதற்குரிய செந்நெறியாம் என ஆணையிட்டு அறைகின்றார் அப்பர் பெருமான். அந்தச் சைவ நெறியை அடைந்தவர்க்கெல்லாம் சித்திப்பது நன்னெறி. அதாவது சைவ நெறிகளாகக் கூறப்படுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால் வகை நெறிகளிலே முன்னவை மூன்றும் கைகூட இறைவனே குருவாக வந்தருள சித்திப்பதாகிய ஞானநெறி.

புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவை யடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிறப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதிற் சரியை கிரியாயோகஞ்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.

என்று சைவத்திறம் அடைந்து ஞானநெறி கைகூட முக்தி பெறுவதாகிய அருமைப்பாட்டைச் சித்தியார் எடுத்துப் பேசுகிறது.

அத்திறமடைந்தவர்கள். ஞானக் கண்ணுல் இறைவனைச் சிந்தையில் காணுவர். அவர்களுக்குச் சிவன் தண்ணிழல் தரும் தருவாக நின்று அருள் செய்வான். அந்த இன்ப நிலை அகலாதிருக்க அவர்கள் இடைவிடாது விதிப்படி அஞ்செழுத்தை ஓதிவருவார்கள். இதனையே நன்னெறியாவது நமச்சிவாயவே என்ருர் அப்பரடிகள் அவ்வாறு ஓதி வருபவர்கள் இறைவனோடு உள்ளத்தைச் செலுத்தி ஏகனுகி நிற்க, மலம், மாயை, வல்வினை ஆகியவை அவர்களை விட்டகலுகின்றன. இத்தகையோர் ஆன்மாவில் இறைவன் ஒருங்கே பொருந்தி நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ருர். இதுவே அத்வைத நிலை. இந்நிலை பெற்றவர் அயரா அன்பினுலே அதாவது இந்நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்கின்ற அன்பினுல் முதல்வன் திருவடிக்கு உரியராவர். அவ்வாறு சித்திக்கப் பெற்ருேர் ஜீவன் முக்தர் எனப்படுவர். அத்தகைய ஜீவன் முக்தர்களில் ஒருவர்தாம்,

"மாதொருபாகர் அன்பின் வழி வருமலாடர் கோமான்" மாதொருபாகரை அயரா அன்பினுல் வழிபட்டு வருகின்ற ஜீவன் முக்தர் மரபிலே அதாவது திருத்தொண்டர் மரபிலே தோன்றியவர்மலாடர் கோமான்.

இவர் ஜீவன் முக்தர் நிலையிலுள்ளார் என்பதை "மாதொருபாகர் அன்பின் வழி வருமலாடர் கோமான்" என்ற தொடரில் காட்டினுர். அவர் சேதி நாட்டரசர். சேதி நாடென்பது தொண்டை நாட்டைச் சார்ந்த ஒரு குறுநிலம். இன்றுள்ள தென்னுற்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தைச் சார்ந்த பகுதியாகும். அப்பகுதியை தென் பண்ணையாற்றின் கரையிலிருக்கும் திருக்கோவிலூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தான் மாலடர் கோமான். 'சேதி நன்னுட்டு நீடு திருக்கோவிலூரில் மன்னி மாதொருபாகர் அன்பின் வழி வருமலாடர் கோமான்" என்று முதல் பாடல் முதலிரு அடிக

ளிலே அவரது உலகியல் நிலையினையும் உயரியல் நிலையி னையும் எடுத்துக் காட்டி அடுத்த இரு அடிகளிலே அவ ரது குறிக்கோளையும் குறிக்கோள் தலை நின்று செய்த பணியையும் காட்டுவாராகி ''வேத நன்னெறி வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு காதலாள் ஈசர்க்கன்பிர் கருத் தறிந்து ஏவல் செய்வார்.'' என்று கூறுகின்றார். வேதம், பசு. மெய்யாகமம் அதன் பால் என்பது ஆன்றோர் கூற்று. வேதப்பயன் மெய்யாகமும் என்பது அதன் கருத்து. மெய்யாகமம் கூறுவது சிவநெறியாம் செந் நெறி இதுவே சைவ நெறி. எனவே வேத நன்நெறி என ஆசிரியர் குறிப்பிட்டது சைவநெறியை. அச்சைவ நெறிகளாவன சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. அவற்றுள் ஞானநெறியே வேத நன்னெறி கூறும் வாய்மை நெறி.

> ''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
> அம்மலர் கழீஇ யன்பரொடு மரீஇ
> மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
> ஆலயம் தானும் அரனெனத் தொழுமே''

என ஞான நெறி நின்றார் நிலையினைச் சிவஞான போதம் எடுத்துக் கூறுகிறது. செம்மலர்போல் விரிந்து விளங் கும் இறைவனைச் சேர்வதற்குத் தடையாயிருக்கின்ற மும் மலர்களை ஞான நீரால் கழுவி அயரா அன்பினராகிய ஜீவன் முக்தர்களோடு கூடி அவர்களது தவ வேடத்தை யும் சிவாலயங்களையும் சிவன் எனவே தொழுதலையே சைவ நன்னெறி காட்டும் வாய்மை நெறி என்பது அப் பாடலால் போந்த பொருள். இந்த வாய்மை நெறி உல கில் விளக்கமடையும் பொருட்டு அதனை மேற்கொண்டொ ழுகினார் நாயனார். நாயன்மார்கள் உலகம் காக்க வந்த உத்தமர்கள். எனவே உலகம் நன்னெறி பெறும் பொருட்டுத்தான் அதனை மேற்கொண்டொழுகினார் என் பதனையே 'விளங்கிட'' எனச் சேக்கிழார் குறிப்பிட்டார்.

அக்குறிக்கோள் தலை நின்று சிவனடியார்கள் மீது அன்புகொண்டு அவர்கள் வந்தபோது அவர்கள் உள்ளக் கருத்தை அறிந்து ஏவல் செய்து வந்தனர். அவ்வாறு சிவனடியார்களைச் சிவனெனவே கருதித் தொண்டு செய் தலாகிய தெய்வ நெறியைச் சிறக்கக் கொண்டொழுகி யதோடு தம் அரசியற் பணியிலும் ஆன்றவராய் விளங்கி ஞர் என்பதைச் சேக்கிழார் பெருமான்.

''அரசியல் நெறியில் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம்பாத நீதி ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெய் நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்''

என்று கூறுகின்ருர்.

ஓர் அரசன் ஆற்றவேண்டிய கடமைகள் மூன்று. ஒன்று முறை தவருத ஆட்சி; இன்னென்று பகையினின் றும் நாட்டைக்காத்தல்; மற்ருென்று நீதி செலுத்துதல்; இம்மூன்றும் விளங்கிடப் பெற்றிருந்தார் நாயனுர். அரசி யல் செய்யும் முறையைப் பற்றி நூற்களிலே கூறப்படுகின்ற அறநெறியினின்றும் வழுவாமல் பாதுகாத்தார். வலிமை மிக்கத் தமது தோளினுல் பகைவரொடு பொருது அவரது எதிர்ப்புக்களை யெல்லாம் அடக்கினுர். அறநூல் விதித்த வற்றிற்கு மாறுபாடில்லாத முறையில் நீதி செலுத்தினுர். இவ்வாறு உலகக் காரியங்களிலே ஈடுபட்டிருந்தாலும் வடக்குநோக்கிப் பொறிபோல எப்போதும் சிவனடியார் பாலே சென்றது அவருள்ளம். கங்கையாற்றைத் தலையில் சூடிய கருணைவள்ளலாகிய சிவபெருமானின் அடியவர்களது தவ வேடத்தையே மனத்தால் எப்பொழுதும் எண்ணி வழி பட்டு வந்தார். அந்நெறி நாடெல்லாம் விளங்க வேண்டு மென எண்ணினுர். அதற்கான பணிகளில் ஈடுபட்டார்.

உமாதேவியை இடப்பாகம் கொண்ட சிவபெருமான் வீற்றிருக்கின்ற ஆலயங்களில் நாட்பூசை முதலிய நடை

பெற வேண்டுவன செய்தார். அவ்வாறு செய்த அவரது உள்ளம் மட்டும் சிவனடியார் தவ வேடத்திலேயே பொருந்தியிருந்தது. அதுவன்றி வேறெதிலும் பற்றில்லாதிருந்தது. ஆகவே தாம் தேடிய செல்வமும் பரம்பரையாகத் தமக்கிருந்த செல்வமும் தில்லைச் சிதம்பரத்தில் நடனமாடுகிற சிவபெருமான் அடியவர்க்கே உரியன என்று எண்ணியவராகித் தம்மை அடியார்கள் அடைந்தபோது மிக்க மகிழ்ச்சியோடு கொடுத்து மகிழ்ந்து வந்தார். இவ்வாறு சிவ வேடத்தையே மெய்ப்பொருள் எனக் கொண்டு வாழ்ந்து வந்தமையால் அவரை மெய்ப்பொருள் வேந்தர் என்று போற்றுகின்றார் சேக்கிழார்.

இத்தகைய பெரியார்க்கும் பகைவன் ஒருவன் தோன்றினான். அவன் பெயர் முத்தநாதன். பல தடவை அவரோடு போர் செய்தான். 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளார்' எனச் சுந்தரரால் போற்றப் பட்டவர் அல்லவா அவர்? அவரை வெல்லுதல் கூடுமோ? பல தடவைகள் பொருதும் தோற்றான் முத்தநாதன். போரினால் வெல்ல முடியாதெனக் கண்ட அவன் வஞ்சனையால் வெல்லக் கருதினான். மெய்ப்பொருள் வேந்தர் அடியாரைப் பணிந்து போற்றும் அரிய இயல்பைக் கேட்டறிந்தான். உள்ளத்தில் ஒரு கொடிய எண்ணத்துடன் திருக்கோவலூரை அடைந்தான். 'அற்றத்தின் வெல்வானாகச் செப்பரு நிலையை எண்ணித் திருக்கோவலூரைச் சார்ந்தான்' என்கிறார், சேக்கிழார்.

முத்தநாதன் மனதில் எண்ணிய வஞ்சக எண்ணத்தைக் கூறவும் விரும்பினாரல்லர். 'செப்பரு நிலைமை எண்ணிச் சென்றான்' என்று செப்பரு நிலையைச் செப்பாமலே பெறவைக்கின்றார். திருக்கோவலூர் எல்லையை அடைந்த முத்தநாதன் ஊரினுள் புகுந்த நிலையை,

"மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி
கையினில் படை கரந்தபுத்தகக் கவளி ஏந்தி

மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்"

என்கிறார் சேக்கிழார்.

மெய்யெலாம் நீறு பூசினன். உடம்பு முழுதும் திரு நீறு பூசினன்; திருநீறு அணியும் முறை கற்றவனல்லன் ஆதலினலும் உடம்பை மறைத்தற் பொருட்டும் உடம்பு முழுதும் நீறு பூசினன்

'மாசிலாத மணிதிகழ் மேனிமேல்—பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்'' எனும் உண்மையை நீறுபூசி இல்லா தாக்கினன் முத்தநாதன். வேணிகள் முடித்துக் கட்டினன். சடைகளை முடியுடன் பின் கட்டினன். முடித்தல் ஒன்றை இன்னென்ருேடு சேர்த்தல். பெண் கூந்தலோடு சேர்த்து முடிக்கிற சவரியை முடி என வழங்குவர். ஒன்றையே, சுற்றிக் கட்டுதல் பிணைத்தல் எனப்படும் ஓலைச் சுற்றிக் கட்டும் கயிற்றிற்கு கட்டாக்கு என்று பெயர். முத்தநாதன் பொய்யான சடை முடிகளைத் தனது முடியோடு முடித்துப் பின் அதனைச் சுற்றிக் கட்டிக் கொண்டான். பொய் யான வேணி என்பதை முடித்துக்கட்டி என்ற தொடர் எடுத்துக் காட்டுகிறது. கையில் படையை மறைத்து வைத்திருக்கிற புத்தகக் கட்டை ஏந்திக் கொண்டான். இன் னெரு பொருளை உள்ளத்திலே கொண்டான். 'மைபொதி விளக்கேயன்ன மனத்தினுள் கறுப்பு வைத்து'' என்ருர். சுடர் எரிகிறது; ஒளியைத் தருகிறது ஆனல் அதன் நடு வினுள் இருப்பது ஒரு கறுப்பு. வணங்கத் தகுந்த ஒளிமய மான தவவேடத்தின் உள்ளே வஞ்சக எண்ணம். முத்த நாதன் உள்ளிலே கொண்ட செப்பரு எண் ணம் எது என்பதைக் கையில் மறைத்து வைத்த பொருளா லும், தக்கதோருவமையாலும் அறிய வைக்கிருர் ஆசிரியர். உலகியல் நெறிக்கும் தவ நெறிக்கும் பொருந்தாத செயலைக் கூறுதற்கும் கூசுமியல்புடையார் சேக்கிழார் என்பது இத ஞல் பெறப்படுகிறதன்ருே?

அத்தகைய மாதவ வேடத்தோடு நகருக்குள்ளே நுழைந்தான் முத்தநாதன். முன்னிரவு காலம் விளக்குக ளாய் ஒளிபெற்று விளங்குகின்ற வீதி வழியே சென்ருன். இரு புறமும் பெரிய மாடங்கள்; அவற்றின மீது வெண் கொடிகள் பறக்கின்றன. மாடத்தினுள்ளே மக்கள் மகிழ்ச்சி யாகப் பொழுது போக்குகின்றனர். கூந்தலில் மலரையும் காதுகளில் குண்டலங்களையும் அணிந்த கொடி போன்ற பெண்கள் நடமாடுகின்றனர்.

"மாதவ வேடங் கொண்ட வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிக ளாடும் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்'

என்று சேக்கிழார் பெருமான் அந்நிலையைச் சித்தரித்துக் காட்டுகின்றார்.

மாடங்களினுள்ளே கருங்கூந்தல் கொடியாட மீது வெண்கொடியாடுகிறது. உள்ளத்தில் வஞ்சகமும் மேல் வெண்ணீறும் பூசிய முத்தநாதன் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது மாடங்களின் நிலை. மாடங்கள் மீதுள்ள அறி வற்ற கொடிகள் வாவென வரவேற்க அறிவுடைய பெண்கள் கறுப்புக் கொடி காட்டித் தம் வெறுப்பைக் காட்டுகின்றனர்.

மேலும் கருங்கூந்தல் கொடிகளை உள்ளடக்கி மேல் நின்றாடும் வெள்ளைக் கொடிகள். முத்தநாதனை நோக்கி "வஞ்சகனே நாங்கள் கறுப்புக் கொடிகளை அடக்கி மேல் நிற்பது போல் உன் வஞ்சம் வெற்றி பெறப் போவதில்லை. மேல்கண்ட தவவேடமே வெற்றி பெறப் போகின்றது என் பது போல் ஆடின.

இத்தகைய குறிப்புக்களை யெல்லாம் சிந்தையில் கொள் ளாது வீதிகளைக் கடந்து அரண்மனை வாயிலை அடைந் தான். சிவனடியார்களுக்கு அரசன் அரண்மனையினுள் எக் காலத்தும் எவ்விடத்தும் செல்ல உரிமை அளித்திருந்தான் அரசன். எனவே முத்தநாதன் தவவேடத்தைக் கண்ட கடைவாயில் காவலாளர்கள் கைகூப்பி வணங்கி "உடைய வர் தாமே வந்தார் உள்ளெழுந்தருளுமென வழிவிட அவ் வாறே பல வாயில்களையும் கடந்து அந்தப்புர வாயிலை அடைந்தான். (தொடரும்)

திருவெம்பாவை

R. கோவிந்தராஜப் பிள்ளை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவெம்பாவை "சத்தியை வியந்தது" என்ற தலைப்பையுங் கொண்டிருக்கிறது. அதை ஆதாரமாக வைத்து ஞானிகள் இறைவனது பணியையே தம் பணியாகக் கொண்ட அருட்சத்திகளின் பெயர்களைச் சொல்லி அச்சத்திகள் தொழிற்பட்டதைத் திருவெம்பாவையில் கூறினர் வாதவூரடிகள் என்பர். அன்னார் கூற்றிற்கும் அந்நூலில் ஆதாரமிருக்கிறது. "பத்துடையீர் ஈசன் பழவடியீர், பாங்குடையீர்" என்று மூன்றும் பாட்டில் வருவதும், பத்தாம் பாட்டில் "கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்" என்றதும் சத்திகளைக் குறிப்பதாக நாம் கொள்ளலாம். அருட்சத்திகள் ஒன்பதின்மர், அதாவது, நவசத்திகள் என்று பேசப்படுவதை நாம் காண்கிறோம். திருவெம்பாவையில் பேசப்பட்ட பெண்களின் உரையாடல் ஒன்பதின்மருக்குள்ளே நிகழ்ந்ததென்பதற்கும் அதில் குறிப்பு காணப்படுகிறது. முதலெட்டுப் பாடல்களில் மட்டுந்தான் பெண்கள் கூடி மற்றப் பெண்களை அழைத்ததாக வாதவூரடிகள் பேசுகிறார். ஒன்பதாம் பாடலிலிருந்து ஈற்றுப் பாடலாகிய இருபதாம் பாடல் வரை அன்னார் ஒன்றுசேர்ந்து பொதுப்படப் பாடியதைக் காண்கிறோம்.

முதலெட்டுப் பாடல்களின் அமைப்பை இனி நாம் ஆராய்வோம். முதற் பாட்டில் வரும் "சோதியை யாம் பாடக் கேட்டேயும்" என்ற சொற்றொடரில் "யாம்" என்ற பன்மையால் குறைந்தபட்சம் இரு மாதர் சென்று மாதே, கண்வளருதியோ ? என்று மூன்றுவது பெண்ணைத் துயிலெழுப்புவதை நாம் காண்கிறோம். துயிலுறும் பெண்ணின் சார்பில் அவளுடைய தோழிதான் அவ்வினாவிற்கு விடை

தருகிறாள். 'ஈதே எந்தோழி பரிசு' என்றதும் தோழியின் விடையேயாம். இரண்டாவது பாடலில்தான், தன்னைத் துயிலெழுப்பிய பெண்களுக்குத் தூங்கும் பெண் 'நேரிழை யீர்' என்று விளித்து விடை கூறுகிறாள். எனவே, முதலிரு பாடல்களில் தோழியை யுள்ளிட்டு நான்கு பெண்கள் கூடி னார்கள் என்று தெரிகிறது. மூன்றாம் பாடல் முதல் ஏழாம் பாடல் வரையில் ஒவ்வொருத்தியும் தனித்தனியே அழைக்கப்படுவதை முத்தன்ன வெண்ணகையாய்!, ஒள் நித்தில நகையாய்!, பாலூறு தேன்வாய்ப் படிறீ!, மானே!, அன்னே! எனவரும் விளிச்சொற்களால் நாம் அறிகிறோம். ஏழாம் பாடலில் அழைக்கப்பட்ட பெண்ணுடன் ஒன்பதின்மர் (4+5) கூடினார்கள். எட்டாம் பாடலில் 'வாழியீ தென்ன உறக்கமோ, வாய் திறவாய்' என்று விளித்தது ஏழாம் பாடலில் கூடிய ஒன்பதாவது பெண்ணை ஏனைய எண்மர் விளித்ததெனவே நாம் கொள்ளவேண்டும். திரு வெம்பாவையின் உரையாசிரியர்களிற் சிலர் அப் பாமாலை நவசத்திகள் தொழிற்பட்டதைக் கூறுகின்றது என்று பேசி யதற்கும் அதில் குறிப்பிட்டிருப்பது புலனாகின்றது.

திருவாசகத்திற்குப் பொருள் நடராஜப் பெருமானே யென்று வாதவூரடிகளே கை காட்டி மறைந்தாரென்றால், அவ்வாசகத்தின் ஒரு பகுதியாகிய திருவெம்பாவையின் உட்பொருளை உணர்ந்து சொல்ல நம்மனோரால் இயலாது. எனினும், அப்பெரியாரின் மணிமொழிகளை ஆதாரமாகக் கொண்டு அப்பகுதியில் காணப்படும் சிறந்த கருத்துக்களில் இரண்டொன்றைக் கூறி இக்கட்டுரையை நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

மகளிர்தம் மார்கழி நீராடலைப் பற்றித் திருவெம் பாவை பேசுகிறது. நமது ஊனுடம்பிலுள்ள புற அழுக் கைக் கழுவுவதற்கு நாம் நீராடுகிறோம். அத்தகைய நீரா டல் நம்முள்ளத்திலுள்ள அகவழுக்கைப் போக்காது. அகத் தூய்மை பெறுவதற்கும் நாம் நீராடவேண்டும். "புறத் தூய்மை நீரான் அமையும், அகத் தூய்மை வாய்மையால்

காணப்படும்" என்றார் வள்ளுவர். நம்முள்ளத்திற்படிந்த மாசுகளைப் போக்க இறைவனையேத்தும் புகழ்மாலைகளை நாம் வாயாரப் பாடவேண்டும். "வாயினாலுன்னைப் பரவிடும் அடியேன் படுதுயர்களையாய் பாசுபதா, பரஞ்சுடரே" என்று சுந்தரர் வட திருமுல்லைவாயில் பதிகத்திற் பாடுகிறார். திருவெம்பாவையின் பதின்மூன்றும் பாடலில் வாதவூரடிகள் நீர் நிறைந்த மடுவை அம்மையப்பனைப் போன்றிசைந்ததெனப் பல உவமங்களால் எடுத்துக் காட்டுகிறார். "தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்" மடு மங்கைபங்கனோடு ஒத்திருக்கிறது என்கிறார் அவர். அதாவது மடுவிலுள்ள நீர் அதில் நீராடுபவரின் புறவழுக்கைப் போக்குவது போல, "இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்ற பொய்யா மொழிக்கேற்ப நாம் உமையொரு பாகன்றன் புகழ்மாலைகளைப் பாடுவதாகிய தீர்த்தத்தில் ஆடினால் நம் ஆன்மாவைப் பற்றிய மும்மலங்களையும் போக்கிக் கொள்ளலாம் என்ற பொருள்பட நிற்கிறது அவ்வுவமம். இதையொட்டியே பன்னிரண்டாம் பாடலில் "ஆர்த்தபிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்று பாடுகிறார் வாதவூரண்ணல். தூய நீர் தீர்த்தமாவது போலத் தன்னை வாயாரப் பாடிப் பரவுவோரைத் தூய்மையாக்கும் இறைவன தீர்த்தனாகிறான். இச் சீரிய கருத்தை நாம் திருவெம்பாவையில் காண்கிறோம்.

திருவெம்பாவை உலகமெலாம் பிழைக்கப் பாடிய அருட்கவியாதலின், அப்பனுவலின் பதினாறும் பாடல் மழைவளத்தைப் பேசுகிறது. "கார்கோண் முகந்த கமஞ்சூல் மாமழை" யை நிறத்தால் இறைவியின் உருவிற்கு ஒப்பாக்கி, மழையின் ஒரு கூறாகிய மின்னலைப் பிராட்டியின் இட்டிடை அல்லது ஒட்டியாணம் என்ற அணிக்குவமையாக்கி, இடியின் சூர்ப்பை அவள் திருவடியின் சிலம்பார்ப்பிற் கிணையாக்கி, வானவில் அம்மையின் திருப்புருவம் போன்றதெனக் கூறி, சிவனடியார்களுக்கு அவள் சுரக்

கின்ற இன்னருளைப் போல மழை பொழிய வேண்டும் என்று வாதவூரர் பாடிய பெருமை போற்றற்குரிய தாகும்.

ஒன்பதாம் பாடலில் வாதவூரடிகள் கடவுளைக் காலாதீதன் அதாவது காலங் கடந்தவராகக் காட்டுகிறார். கடவுள் பழம் பொருளா அல்லது புதுப் பொருளா (ancient or modern) என்ற வினாவிற்கு விடைதருவார் போல் "முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்று அடிகளார் கடவுளை விளிக்கிறார். பழமையைப் பற்றி நாம் பேசும்பொழுது கடவுள் மிகப் பழையவனாகிறான். புதுமையைப் பற்றிப் பேசும்பொழுதுஅவன் மிகப் புதியவனாகிறான். நாம் வாழும் மிக நூதனமாகிய இந்த அணுயுகத்தில் கூட நாம் காணும் புத்தம் புதுமைகளுக்கும் இறைவனே ஆதாரமாகி நின்று நம்மையும் நாம் வாழும் இந்நிலவுலகத்தையும் இயக்குகிறான் என்ற உண்மையை விளக்க வாதவூரார் பாடிய செய்யுளடிகளின் சொற் சுவை, பொருட் சுவைகளை நாம் எண்ணி யெண்ணி மகிழ்வோமாக.

அடுத்த பாடலாகிய பத்தாம் பாடலின் முதலிரண்டடிகள் "பாதாளமேழினுங் கீழ் சொற் கழிவு பாத மலர் போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" என்பவையாகும். அவ்விரண்டடிகளில் இறைவனுடைய சர்வவியாபகத் தன்மையை வாதவூரார் நமக்கு விளக்கியுள்ளார். "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்......நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்ற திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருவண்டப் பகுதியினின்று, நாம் வசிக்கும் நிலவுலகம் அல்லது பூகோளத்தின் அளவு தினைத்தனையதே என்று தெரிகிறது. அதனுள் பாதாளங்கள் அல்லது ஆழ்ந்தவிடங்கள் ஏழென்ற ஒரு கணக்குண்டு. ஒருவன் ஏழு பாதாளங்களையும் துருவிச் சென்று பார்த்தால் அங்கே இறைவனது திருவடிகள் காணப் பெறுமோவென்றால் அவ்விடம் சொல்லிறந்த இடமேயாகுமன்றி

இறைவன் திருவடிகள் அதனினும் ஆழ்ந்துள்ளனவென் கிறார் மாணிக்கவாசகர். அவனுடைய திருவடியோவென் றால், இந்நிலவுலக மக்கள் தம் பேரறிவுகளாகிய ஐம்புலன் களாலும், அளப்பரும் அந்தக் கரணங்கள் நான்கினாலும், செய்யக்கூடிய பொருள்களெல்லாம் அறியப்பட்டு, இனி பெறுவதற்குப் பொருளேயில்லையெனலாம்படி அவை முடிந்த இடமெதுவோ அதுதான் இறைவன் திருவடி யென்கிறார் அவர். ஈண்டுக் குளித்த ஆழத்தையும் பரப் பையும் மனிதன் முற்றுங் காண்பது அரிது. ஆகவே, இறைவனது முழுத் தன்மையையும் இதுகாறும் கண்டா ரில்லை. எனவேதான், வாதவூரர் "வேதங்கள் ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்று வேறொரு இடத்தில் பாடினார். இறைவன் சடம், சித்தாகிய எப் பொருளினும் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்ற உண்மை பெறப்பட்டது.

இறைவன் மேற்கொள்ளும் அருள் வடிவங்கள் ஒன்ப தாகும். அவை, உருவத் திருமேனி நான்கும் (பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுவரன்) அருவத் திருமேனி நான்கும் (நாதம், விந்து, சத்தி, சிவம்) அருவுருவத் திரு மேனி ஒன்றும (சதாசிவம்) சேர்ந்துஒன்பதாகி, ஒவ் வொன்றும் பலப்பலவாய் விரிந்துளது. அவற்றுள் மாதொரு பாகனாகிய திருவுருவம் ஒன்று. இவ்வுண் மையைத்தான்வாதவூரடிகள் மேற்கூறிய பத்தாப் பாடலில் "பேதையொருபால, திருமேனி ஒன்றல்லன்" என்ற சொற்களால் விளக்குகிறார்.

வேதங்களும், விண்ணுள்ளோரும், மண்ணுள்ளோரும் இறைவனது புகழை எவ்வளவுதான் ஓதித் துதித்தாலும் அவன் புகழ் ஓங்குகிறதேயன்றி முடிவடைவதில்லை. அம் முறையில் இறைவன் அன்னார்க்கு ஒப்பற்ற தோழனாகிறான். உலகியல் நட்பின் இலக்கணங் கூற வந்த திருவள்ளுவர்

"இனையர் இவர்எமக்கு இன்னம் யாமென்று
புனையினும் புல்லென்னும் நட்பு"

என்றார்.

தாம், அவரென்னும் வேற்றுமையின்றிப் பழகினும் நண்பர் இருவர் ஒருவரையொருவர் பாராட்டிப் பேசினால் அவரிடை நட்பு அற்பமாகி விடும் என்பது மேற்குறித்த குறளின் பொருளாகும். முழுதும் ஒத்த தன்மையே உலகியல் நட்பின் இலக்கணம் என்பது அக்குறளின் கருத்து. உலகியல் இவ்வாறாக, இறைவனது புகழை அவனடியார்கள் பாடப் பாட அது ஓங்குகிறதென்றால், இறைவனுடைய ஒப்பற்ற தன்மையன்றோ புலனாகின்றது? எனவேதான், அவன் நமக்கு ஒப்பற்ற தோழனாகிறான். தொண்டுபடும் அடியார்களின் உள்ளங்களில் இமைப்பொழுதும் நீக்கமற நின்ற இறைவன் 'தொண்டருளன்' ஆயினான்.

இறைவனுடைய இலக்கணங்களை இவ்வாறு பேசி வந்த வாதவூரடிகள் மேற்குறித்த பத்தாஞ் செய்யுளின் இறுதியில் "கோதில் குலத்தான்றன் கோயில் பிணாப் பிள்ளைகாள்" எனவிளித்துச் சில கேள்விகளைக் கேட்கிறார். அண்ட கோடிகளின் பரப்பே கடவுளின் அருள்வடிவமாயின் அவனுடைய ஊர் யாது? (ஏதவனூர்). உருவமுள்ள ஒரு பொருளுக்கு ஒரு பெயரும் உளதாகும். உருவமில்லாப் பொருள் அருவமாகிறது. உருவமும், அருவமும் ஒரு பொருளுக்கே உளதாயின் அப்பொருளை யாது பெயரிட்டழைப்பது என்பதுதோன்ற "ஏதவன்பேர்" என்றார். 'ஒருநாமம் ஒருருவம்ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்ற மற்றொரு திருவாசகப் பகுதியும் இவ்வுண்மையையே விளக்குகிறது. தம் புகழை ஏத்துகின்றவர்களுக்கு கடவுள் உலவாத் தோழனாகிறான். பாசத்தாற் பிணிப்புண்ட உயிர்களாகிய நம்மிடைதான் உற்றார், உறவினர், அயலார் என்ற பேதங்களுண்டு. கடவுள் இயல்பாகவே பாசங்கள் நீங்கியவனாகையால்

அவனுக்கு உற்றருமில்லை, அயலாருமில்லை. இவ்வுண்மை தோன்றவே ஆளுடைய அடிகள் "யார் உற்றார், யார் அயலார்?" என்றார். ஊரிலான், பேரிலான், உறவிலானாகிய கடவுளைப் பாடுவதெப்படியென்கிறார் அடிகளார்.

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்"

வருந்துகிறோம்

நம் சமாஜப் பேரன்பரும் திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் குமாரருமாகிய திரு சி. ஆர். சதாசிவ முதலியார் அவர்கள் 24-4-67ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள் என்பது தெரிந்து வருந்துகின்றோம். அவர்கள் குடும்பத்தினர் வழி வழியாக நம் சமாஜத்தின் பால் பேரன்புகொண்டவர்கள். அவர்களைப் பிரிந்தது நம் சமாஜத்துக்குப் பேரிழப்பாகும். அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்கள் குடும்பத்தினர் யாவருக்கும் நம் சமாஜத்தினரின் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். காலஞ்சென்ற அப் பெரியாரின் ஆன்மா குஞ்சித பாதத்தினினிது சிறப்புற்றிருக்க இறைவன் திருவருளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

நம் சமாஜப் பொருளாளர் திரு. சு. இராமசாமி ராஜா அவர்களின் இல்லக்கிழத்தியார் திருமதி தனலக்குமி அம்மையார் அவர்கள் 29-5-67 திங்களன்று இவ்வுலகி கினின்று பிரிந்தது கேட்டு வருந்துகின்றோம். அவ்வம்மையாரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கு சமாஜத்தினரின் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் ஆன்மா இறைவன் திருவடி நிழலிலின்புற்றிருக்க பெருமானருளையே வணங்கி வாழ்த்துகின்றோம். அவர்கள் உத்தரகிரியை நாளன்று திரு. இராஜா அவர்கள் சமாஜத்துக்கு அளித்த சமயக் காணிக்கை ரூ. 3-00 வரப்பெற்றோம்.

சைவ சமயப் புரவலர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் 26-5-67 வெள்ளியன்று தம் அறுபதாவது வயதில் இவ்வுலக வாழ்வினீங்கினார்கள். திரு. டாக்டர் அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர். பெரிய புராணம் ஒரு சமய வரலாற்று நூல் என்பதைப் பல்வேறு கோணங்களில் ஆய்ந்து வெளியிட்டு டாக்டர் பட்டமும் பெற்றார்கள். கல்வெட்டுத் துறையில் ஆராய்ச்சி மிக்கவர். நம் சமாஜ மாநாடுகளில் பல சமயங்களில் பங்கு கொண்டவர்கள். வாலாஜாபாத்தில் நிகழ்ந்த சமாஜ ஆண்டு விழாவில் பொன்னாடை போர்த்தும் சிறப்புப்பெற்ற பெருமகனாராவர், அவர் இழப்பு பொதுவாகத் தமிழுலகத்துக்கும் சிறப்பாகச் சைவ உலகத்துக்கும் பேரிழப்பாகும். அவரைப் பிரிந்து துன்புறும் அன்னார் குடும்பத்தினருக்குச் சமாஜத்தினரின் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. டாக்டர் அவர்கள் ஆன்மா எம்பெருமானிணையடிகளில் இன்பமார்ந்திருக்க அவனருளையே அருள் பாலிக்குமாறு வணங்கி வாழ்த்துகிறோம்.

சமாஜப் பணியாளர்கள்

திருச்சி மௌன மடத்தில் சமாஜத்தலைவர் திரு. கோ. முத்துசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் 31–12–66ல் நிகழ்ந்த சமாஜப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெற்ற சமாஜப் பணியாளர்கள் விவரம் வருமாறு:–

1. தலைவர் :-திரு. ஜி.எம். முத்துசாமிப் பிள்ளை, ஐ.ஏ எஸ்., (ஓய்வு)
2. துணைத் தலைவர்கள் :-
   திரு இராவ்சாகிப், நல். முருகேச முதலியார், பி.ஏ.,
   திரு இராவ்பகதூர், கே. அரங்கசாமி முதலியார், பி.ஏ.,
3. செயலாளர்:-திரு டி.கே. நாரயணசாமி நாயுடு
4. உதவி செயலாளர்:-திரு மு. நாராயணசாமி முதலியார்
5. பொருளாளர்:- திரு எஸ். இராமசாமி

6. பத்திராசிரியர் :- திரு மு. அருணாசலம் எம்,ஏ.
7. உதவிப்பத்திராசிரியர்:-திரு வித்வான் அம்பை சங்கரனார்
8. மாதக் கணக்குப் பரிசோகர் :-
திரு ஸி. வி. கிருஷ்ணமூர்த்தி
9. ஆண்டுக் கணக்குப் பரிசோகர் :-
திரு எஸ். டி. குமார், பி.ஏ.,

செயற்குழுவினர்:-1 திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் எம்.ஏ. 2. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை-பி.ஏ., எல்.டி.. 3. திரு. ந. ரா. முருகவேல், எம் ஏ., எம்.ஓ.எல்., 4. திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம் ஏ., 5. திரு எஸ். திருஞானசம்பந்தம் பிள்ளை, எம்.ஏம்., எல் டி., 6. திரு க. வடிவேலாயுதம் எம்.ஏ., 7. திரு நெ. த. கிருஷ்ணசாமி எம்.ஏ., எல் டி., 7. திரு எம். சந்திரசேகர முதலியார் 9. திரு கே. எல். பழநிசுவாமி, பி. ஏ., எல்.டி., 10. திரு வித்துவான் பி.சொ சண்முகம் பிள்ளை 11. திரு வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை 12. திரு கொ. நீ. சிங்காரவேலு, எம் ஏ.,

பணியாளர் குழு :- 1. திரு. ஸி. எம். இராமச்சந்திரம் செட்டியார், கோவை. 2 திரு க. வச்சிரவேல் முதலியார், காஞ்சி. 3. திரு வைரவப் பிள்ளை, கொழும்பு-6 4. திரு பு. ரா. சுவாமிநாதன், எம் ஏ., எல்.டி., சிதம்பரம். 5. திரு மஞ்சக்கொல்லை சம்பந்தமூர்த்தி முதலியார் 6. திரு எஸ். நடராஜ நாடார், பி.ஏ., பி,எல்., 7. திரு வித்துவான் வெள்ளைவாரணனார் சிதம்பரம் 8. திரு கு. காமாட்சி அம்மாள், எம் ஏ., சேலம். 9 திரு ஏ.ஆர். ஏ.ஆர். எம். சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி. 10. திரு எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி.

பத்திராசிரிய ஆலோசனைக் குழு:- 1. திரு க. வச்சிரவேல் முதலியார்: 2. திரு எஸ். அம்பிகைபாகன், யாழ்ப்பாணம். 3. திரு க. வெள்ளைவாரணனார். 4. திரு ஆ சுப்பிரமணியம் (சூபரிண்டெண்ட் இன்ஜினியர்) 5. திரு ந ரா முருகவேள்.

ஆராய்ச்சிக் கழகம் :- 1. மேலையூர் மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், 2. வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம். 3 வித்துவான் சொ சிங்காரவேலனுர். 4. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம், எம் ஏ. எம்.லிட்., 5. வித்துவான் அருணைவடிவேலு முதலியார் 6. திரு. பி. சுந்தரேசம் பிள்ளை அவர்கள், கும்பகோணம்.

வெளியூர் ஆலோசனைச் சபையினர் :-

செங்கற்பட்டு :- திரு வித்துவான் திருஞான சம்பந்த முதலியார், காஞ்சி, திரு கே. இராஜு முதலியார், கைவண்டூர் திரு வா. தி மாசிலாமணி முதலியார்.

தென்னூர்க்காடு:-திரு என்.எம். பொன்னம்பலம் பிள்ளை திரு எஸ். இரத்தினசாமி செட்டியார், திரு பழமலை, பெண்ணுகடம்.

புதுவை :-திரு சேனுபதி முதலியார், திரு ஆர். பழமலை திரு சென்னியப்ப முதலியார்.

காரைக்கால் :- திரு சொ. தட்சிணுமூர்த்தி முதலியார், திரு கே எஸ். எஸ் நடேச முதலியார்.

தஞ்சாவூர் :- திரு விருத்தாசல செட்டியார். திரு வைத்தியலிங்க முதலியார், திரு திருநாவுக்கரசு முதலியார்.

திருச்சிராப்பள்ளி :-திரு அரிமழம் ரா அண. அண்ணுமலைச் செட்டியார். திரு. ஜி வரதராஜப் பிள்ளை, திரு. எல். செல்லப்பச் செட்டியார்.

இராமநாதபுரம் :- திரு சேவு. மெய்யப்பச் செட்டியார். திரு சிடி. எம். என். நாராயணன் செட்டியார். திரு காசிநாத துரை.

மதுரை :- திருமதி இராதா தியாகராாசன், திருமதி புஷ்பம் நடராசன், திரு வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

திருநெல்வேலி :- திரு வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பாசமுத்திரம் திரு வித்வான் மறை திருநாவுக்கரசு, திரு எஸ். எஸ். அருணுசலம் பிள்ளை.

வடஆர்க்காடு :- திரு புரிசை முருகேச முதலியார், திரு வி. எஸ். கணபதி முதலியார், தெள்ளாறு

கன்யாகுமரி :- திரு சி. வள்ளிநாயகம் பிள்ளை பி. ஏ., பி. எல்., திரு வித்வான் குமரேசப்பிள்ளை, திரு டாக்டர். பி. நடராசன்,

சேலம் :- திருமதி அ. கு. காமாட்சி அம்மையார், திரு அப்பாய் செட்டியார்.

தர்மபுரி :- திரு பொத்தனூர் (வேலூர்) மணிவாசகம்' திரு எம். ஆர் குணசீலன்.

கோவை :- திரு சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி.ஏ., பி.எல்., திரு கே. பி. ஆர் சுப்பராயன், சிவகிரி, திரு ரா. ஆறுமுகம், புஞ்சைப் புளியம்பட்டி.

பெங்களூர் :- திரு ஏ ஆர் அண்ணாமலை முதலியார், திரு எஸ். கனகசபாபதி பிள்ளை, திரு பத்மநாப முதலியார்.

கொழும்பு :- திரு குலசபாநாதன், திரு அருள் தியாக ராசா, திரு சபாபதிப் பிள்ளை.

திருக்கோணமலை :- திரு பண்டித ஆர். வடிவேலு, திரு எஸ். அம்பலவாணன்.

மட்டக்களப்பு :- திரு க. அருணாசல தேசிகர். திரு பூபால பிள்ளை, திரு கணபதி.

மலாய்நாடு :- திரு பி. எல். சிவநேயன், திரு ஆ. மு. பெரியசாமிப் பிள்ளை, திரு ஆர்வி. கந்தையா, திரு எம். இராமசாமி முதலியார்.

கல்கத்தா :- திரு என். என். தியாகராசன், தமிழ் இலக்கியக் கழகம். திரு என். சிங்காரம், பிலிப்ஸ் இந்திய லிமிடெட், 31பி, ராஜா பாசந்தராய் ரோட், கல்கத்தா-29.

பம்பாய் :- திரு ஆர். முருகையா, 6-67 சரஸ்வதி காலனி மாதுங்கா, பம்பாய்-19.

டில்லி :- திரு எம். எஸ். பி. சண்முகம் எம்.ஏ., டில்லி தமிழ்ச் சங்கம்.

26-2.67ல் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கள் தலைவர் பதவியிலிருந்தும், திரு நல். முருகேச முதலியார் அவர்கள் துணைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகிவிட்டனர். தலைவர் இடத்திற்குஅன்றே திரு. ச, சச்சிதானந்தம் பிள்ளையவர்களை தீர்மானிக்கப்பட்டது.

26-3-67ல் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் செயலாளர் பதவியிலிருந்து விலகி விட்டார்கள். அவ்விடத்திற்குதிரு சி. வடிவேல் பிள்ளை அவர்களைச் செயலாளராகத் தீர்மானிக்கப் பெற்று 30-4-67 முதல் பொறுப்பேற்றார். 30-4-67 செயற்குழுக்கூட்டத்தில் திரு கோ மு.முத்துசாமி பிள்ளையவர்களையே துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின் 279ஆம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள் 26.5-67 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் சிறப்புற நிகழ்ந்தது. அன்றே இராமேசுவரம் முதல் திருக்கேதாரம் முடிய 49 இடங்களில் அன்னம் பாலிப்புக்கள் காசி மடத்தின் அறக் கட்டளைப்படி நிகழ்ந்தன. மதுரையில் 26. 27-5-67 ஆம் நாட்களில் தேவார அகண்ட பாராயணமும் ஓதுவார்களால் நிகழ்த்தப் பெற்றது.

கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் சார்பில் சேக்கிழார் நாயனுர்குருபூஜைத் திருநாள் 11–6–67 அன்று காலையில் திருப்பேரூரிலும் மாலையில் கோவை சைவப் பிரசங்க சாலையிலும் சிறப்புற நிகழ்ந்தது பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை, வித்துவான் எஸ். அருணுசலம் பிள்ளை முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

பூவாளுர்ச் சைவசித்தாந்த சங்கத்தின் 57ஆவது ஆண்டு விழா 3. 4-6-67ல் வெள்ளாஞ் செட்டியார் மண்டபத்தில் மேலையூர் தவத்திரு மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. “திருவிளையாடற் புராணத்தில்” என்ற கருத்தரங்கு ஒன்றும் நிகழ்ந்தது. பல பேரறிஞர்கள் கலந்து சொற்பெருக்காற்றினர்.

குன்றத்தூர் சேக்கிழார் திருப்பணிக் கழகத்தின் 26ஆம் ஆண்டு விழா 2–6-67 முடிய நிகழ்ந்தது. பல பெருமக்கள் பெரிய புராணச் சொற்பொழிவுகளை இரவு நேரங்களில் ஆற்றினர். பகலில் இப் பத்து விழா நாட்களிலும் காலை 9–12, மாலை 3-6 வரை காஞ்சிபுரம் திரு பொன் சண்முகனுர் அவர்களால் பெரிய புராண வகுப்புக்கள் நடத்தப்பெற்றன. பல அன்பர்கள் பங்கு பெற்றுப் பயனெய்தினர்.

குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள் பெருந் திருவிழா 1-6-67 முதல் 11-6-67 முடிய சிறப்புற நிகழ்ந்தது.

நம் சமாஜப் பெருந் தலைவர்களில் ஒருவராம் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் ஈழம் சென்று பல சைவ சித்தாந்தப் பேருரைகளை வழங்கியுள்ளார்கள், 10-5-67 முதல் 4-6-67 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிவஞானபோதச் சிற்றுரை வகுப்பை நடத்திஞர்கள். அவர்கள் சமயத் தொண்டு சிறக்க இறைவன் இன்னருள் புரிவாஞக.